கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

அசல் வழக்கு எண். 51/2017

08.02.2023

பெயர் - போஸ்

பி.வா.சா.1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1. இந்த வழக்கில் சொல்லியுள்ள தாவா சொத்தானது தொப்பலாக்கரைக்குச் செல்லும் சாலைக்கு மேற்குப்பக்கமாக உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எந்த வருடத்தில் பாத்தியமானது என்றால் 25 வருடங்களுக்கு முன்பு பாத்தியமானது. 20,11,1995ம் தேதியில் சீனிவாசன் என்பவரிடமிருந்து ஒரு கிரைய இரசீதுமூலமாக தாவா சொத்தை உரிமையடைந்துள்ளேன் என்று நான் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். சொத்தை பாத்தியமடைந்த 1995ம் வருடத்திலிருந்து சொத்தை 3,4 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுக்கும்வரை நான்தான் அனுபவம் செய்துவந்தேன் என்றால் சரிதான்.

2. 3,4 பிரதிவாதிகள் தொப்பலாக்கரை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது உரிமை அனுபவம் சம்பந்தமாக 3,4 பிரதிவாதிகளுக்கு அவர்கள் கிரையம் வாங்கும் முன்பே நன்கு தெரியும் என்றால் சரிதான். எனது உரிமை, அனுபவத்தினை தெரிந்துகொண்டு சரியான பிரதிபிரயோஜனத்திற்கு 3,4 பிரதிவாதிகள் என்னிடம் இருந்து கிரையம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. 3,4 பிரதிவாதிகள் என்னிடம் கிரையம் பெற்றதேதியிலிருந்து தற்போதுவரை அவர்கள்தான் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் தரப்பில் 1995ம் ஆண்டிலிருந்து வழக்கை தவிர்த்து வேறு எந்த விதத்திலும் எந்தவிதமான கோருரிமையும் செய்ததில்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வாதிகள் தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.